1993 மார்ச் 29]

இணைப்பு—III.

வணிக வரிகள் மற்றும் அறநிலையத்துறை.

மானியக் கோரிக்கை எண். 5.

முத்திரைத்தாள் நிர்வாகம்.
கொள்கை விளக்கக் குறிப்பு.

1. பொது—

சொத்து விற்பனை, பரிவர்த்தனை, அடைமானம், நன்கொடை உடமை, உரிமை நிலவர ஏற்பாடு முதலியவை குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத்தாள் தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) வகை செய்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு பதிவுத்துறைத் தலைவர் 1—12—1980-லிருந்து வருவாய்க் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரியாக (முத்திரைத்தாள் வருவாய்) செயலபட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் மூலம் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருவாயை வசூலிக்கும் பொறுப்பிலும் இருந்து வருகிறார்.

2. முத்திரைத்தாள்களின் தேவையைக் கணித்தலும், முத்திரைத்தாள்களை வழங்குதலும் :—

தமிழநாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத் தாள்களான நீதித்துறையைச் சார்ந்த முத்திரைத் தாள்கள், நீதித்துறையைச் சாரா முத்திரைத்தாள்களின் தேவையை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து, அதனை நாசிக்கிலுள்ள இந்திய பாதுகாப்பு அச்சக முத்திரை தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையில் உள்ள கருவூலக் கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத் தாள் உதவிக் கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத் தாள் உதவி கண்காணிப்பாளராக செயல்படுகிறார். முத்திரைத் தாள்களின் ஆண்டு மற்றும் காலாண்டிற்கான தேவைப்பட்டியலை மாவட்ட கருவூல அதிகாரிகளும், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளரும் தயாரிக்கின்றனர். அவற்றை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கிறார். வெவ்வேறு கருவூலங்களில் முத்திரைத்தாள்களின் இருப்பு நிலவரப்படியும், பொது மக்களுக்குத் தேவைப்படும் அனைத்துவிதமான மதிப்புகளைக் கொண்ட முத்திரைத்தாள்களை வழங்கும் நோக்குடனும் பொது மக்களின் தேவை திடீரென அதிகரிக்கும்போது அத் தேவையை நிறைவு செய்யும் வகையிலும், சென்னை முத்திரைத்

தாள்கள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்த முத்திரைத்தாள்கள் தேவைப்பட்டியலை தயாரிக்கிறார். குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத்தாள்கள் அவசரமாக தேவைப் படும்போதும் பற்றாக்குறை ஏற்படும் போதும் அம்முத்திரைத் தாள்களை இருப்பு வைத்துள்ள மாவட்ட கருவூலத்திலிருந்து இருப்பு இல்லாத மாவட்ட கருவூலத்திற்கு தேவையான முத்திரைத்தாள்களை மாற்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

3. உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்:

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலமும் கருவூலங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும், பொது மக்களுக்கு முத்திரைத்தாள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் 2,452 உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட உறுதிமொழிக்கிணங்க தற்போது முத்திரைத்தாள் விற்பனையாளர் எண்ணிக்கையை 5000 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இது படிப்படியாக அமல்படுத்தப்படும். முத்திரைத்தாள் விதி களில் குறிப்பிட்டவாறு உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு தரகுத் தொகை வழங்கப்படுகிறது. இவர்களின் பணிகளை மாவட்ட பதிவாளர்களும், பதிவுத்துறை உயர் அதிகாரிகளும் மேற்பார்வை செய்து முறைப்படுத்து கின்றனர். எதிர்ப்பாராத சூழ்நிலையில் செயற்கையாக ஏற்படுத்தப்படும் முத்திரைத்தாள் தட்டுப்பாட்டைத் தவிர்க்க பொதுவான தன்மையிலான பத்திரங்களைப் பொறுத்தமட்டில் முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக, ரொக்கம் பெற்று சான்று சேர்க்க சார்பதிவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முத்திரைத்தாள்கள் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து பதிவு அலுவலகங்களிலும், முத்திரைத்தாள் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. பொது மக்கள் அவர்களுடைய பத்திரங்களில் முத்திரை வில்லைகளை ஒட்ட உதவும் வகை யில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் சிறப்பு ஒட்டு வில்லைகள் எப்போதும் கிடைக்கின்றன.

1993 மார்ச் 29]

4. வருவாய் (முத்திரைத்தாள் வருவாய்) :—

வருடம்,	பத்திரப் பதிவு அதிகாரிகள்	முத்திரை தாள்கள் கண்காணிப்பாளர் மூலம்.	மொத்தம்,
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் கோடியில்)	
1990—91	267.53	20.48	288.01
1991—92	333.66	25.60	359.26
1992—93 (2/93 வரை)	308.58	29.72	338.30

5. வழிகாட்டி மதிப்பு மறு நிர்ணயம் :—

அசையும் சொத்துக்கள் அல்லது அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின்பேரில் அதாவது சொத்துரிமை மாற்றம், சொத்து பரிமாற்றம், தானம், விடுதலை ஆவணம், உடமை உரிம நிலவர ஏற்பாடு, நிலையான குத்தகை, உடமை உரிமையில் உள்ள அடைமானம் ஆகியவை போன்ற ஆவணங்களுக்கு முத்திரைத்தாள் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது. சொத்து விற்பனைமாற்றம் பரிவர்த்தனை, தானம், உடமை உரிமை நிலவர ஏற்பாடு குறித்த நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப் பட்டு வருகிறது. பத்திரத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிட்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்குடன் பத்திரப்பதிவு அதிகாரிகளுக்கு அவரவர் அதிகார எல்லைக் குள் அமைந்துள்ள சொத்தின் தோராய மதிப்பைக் குறிப் பிடும் வழிகாட்டிப் பதிவேடு கொடுக்கப்பட்டுள்ளது.

காலமுறைக்கேற்ப ஒவ்வோராண்டும் வளர்ச்சி சதவிகிதம் விற்பனைப் புள்ளி விவரம், நிலத்தின் உபயோகம், பூகோள அமைப்பு, தெருக்களின் அகலம் மற்றும் விசாரணையின் மூலம் அறியப்படும் மதிப்பு ஆகிய விவரங்களைக் கொண்டுவழி காட்டிப் பதிவேடுகளின் மதிப்பு திருத்தியமைக்கப்படுவதற்கு ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் கீழ் ஒரு 'வழி காட்டிக்குழு' இயங்கி வருகிறது. அத்துடன் பொது மக்க ளிடமிருந்து பெறப்படும் வழிகாட்டி மதிப்புகள் சம்பந்தப் பட்ட கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுத்து முரண்பாடு

கள் உடனுக்குடன் சரி செய்யும் பணியையும் இக்குழு மேற்கொண்டு வருகிறது. இக்குழு, வழிகாட்டிப் பதிவேடு களிலுள்ள மதிப்பு விவரங்களில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து முறையீடுகளைப் பெற்று அவற்றின் மீது தல ஆய்வும், விசாரணையும் மேற்கொண்டு முரண்பாடுகளை சரி செய்கிறது. தற்போது பொது மக்களிடம் மனையிடங்களை வாங்கும் வழக்கம் அதிகரித்துள்ளதால் நகரங்களுக்கு அருகாமையி லுள்ள நிலங்களும், நஞ்சை நிலங்களும், விவசாய புறம் போக்கு நிலங்களும் தரிசு நிலங்களும், வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வழிகாட்டிக் குழு, துறையி லுள்ள அலுவலர்களின் உதவியைக் கொண்டு மனைப் பிரிவுகளையும், மனையிடங்களையும் ஆய்வு செய்தும் விசாரணையின் மூலமும், பதிவுப் புள்ளி விவரங்கள் அடிப் படையிலும் சரியான மதிப்பை நிர்ணயம் செய்கிறது.

கடைசியாக 18416 வழிகாட்டிப் பதிவேடுகளுக்கு திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் 1-4-1992 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திருத்தத்தினால் ஆண்டு தோறும் ரூ. 20 கோடி கூடுதல் வருவாய் அரசுக்கு கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1993-94ஆம் ஆண்டுக்கு திருத்திய மதிப்புகள் 1—4—1993 முதல் நடை முறைக்கு கொண்டு வரும் வகையில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. தேவைப்படும்போதெல்லாம், வழிகாட்டி மதிப்பைச் சரி பார்ப்பதன் மூலம் சொத்துக்களைக் குறைத்து மதிப்பிடும் பழக்கத்தை நீக்கும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. துறையின் வருவாய் வசூல் :—

இத்துறையில் தீவிரமான மேற்பார்வையினாலும், விழிப் புணர்வினாலும் பத்திரப் பதிவுக் கட்டணம், முத்திரைத் தாள் தீர்வை ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய், 1968-69 இல் ரூ. 40 கோடியாக இருந்தது. 1991-92ஆம் நிதியாண்டில் கிடைத்த வருவாய் ரூ. 399.05 கோடியாக அதிகரித்துள்ளது. 1992-93 இல் 28-2-93 முடிய ரூ. 342.93 கோடி கிடைத்திருக்கிறது. முத்திரைத் தீர்வை விலக்குகள் அளித்த வகையில் அரசுக்கு ரூ. 9.95 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

7. இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவின் கீழ் வரும் இனங்கள். :—

பத்திரங்களைப் பதிய வருபவர்கள் பத்திரத்தில் குறிப்பிட பட்டுள்ள சொத்தின் சரியான மதிப்பைக் குறிப்பிட வேண்டும் சொத்தின் சரியான சந்தை மதிப்பு பத்திரத்தில் உண்மையில்

1993 மார்ச் 29]

குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள பத்திரப் பதிவேடுகளை வைத்து சரிபார்க்கின்றனர். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப் இடையே பிற்கும் வழிகாட்டி பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள மதிப்பிற்கும் வேறு பாடு ஏதுமிருந்து பத்திரம் பதிய வருபவர் அத்தொகையைச் செலுத்த மறுத்தால் இந்திய முத்திரைச்சட்டப் பிரிவு 47(ஏ) இன் கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை தீர்மானிப்பதற்கு பத்திரப் பதிவு அதிகாரி அந்த பத்திரத்தை மாவட்ட ஆட்சியருக்கு அதாவது இப்பணிக்காக நியமிக்கப்பட்ட தணித்துணை ஆட்சியர் (முத்திரை)-க்கு அனுப்பி வைப்பார். செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கிறார். அவ்வாறு சட்டப் பிரிவு 47 (ஏ) யின் கீழ் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்வதால் பாதிக்கப்பட்டவர்கள் துணை நீதி மன்றங்களில் முறையீடு செய்யலாம். முத்திரைச் சட்டம் பிரிவு 47 (ஏ) யின் கீழ் மதிப்பு நிர்ணயம் செய்ய அனுப்பப்பட வேண்டிய ஆவணங்களின் எண்ணிக்கை பெருமளவில் உள்ளதால், 1991-92 ஆம் ஆண்டிற்கு முத்திரைச் சட்டம் பிரிவு 47 (ஏ) யின் கீழ் ஆட்சியர்களாக தனித்துணை ஆட்சியர்கள்(முத்திரை) மற்றும் உதவிகர பணியாளர்களை அரசு வழங்கியுள்ளது. மேற்கண்ட சிறப்புப் பணியாளர்கள் 1991-92 ஆம் ஆண்டில் 68055 வழக்குகளை முடித்து ரூ. 9.00 கோடி வருவாயை ஈட்டியுள்ளனர்.

8. கட்டிடங்களைப் பார்வையிடுதல் :—

கட்டிடங்களை விற்பனை செய்தல், நன்கொடையாகக் கொடுத்தல், பரிவர்த்தனை செய்தல் ஆகியவற்றைப் பொருத்தமட்டில்அக்கட்டிடத்தின் முழு விவரங்களையும் ஒரு பிற்சேர்க்கைப் படிவம் 1 (அ) வில் குறிப்பிட்டு பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், பத்திரம் பதிய வரும் பொது மக்கள் பொதுவாக உண்மையான அளவுகள் மற்றும் விவரங்களை ஆவணத்தில் கொடுப்பதில்லை. எனவே, இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 27ன் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய உண்மை விவரங்களை ஆவணத்தில் மறைத்து உண்மையான மதிப்பை மறைத்து குறைவாக மதிப்புக் காட்டப்பட்டுள்ள இனங்களைக் கண்டு பிடிக்க அரசு ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் தலைமையின் கீழ் புலனாய்வுக் குழு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. நான்கு பதிவாளர்களையும் இருபத்தி ஆறு துணைக் மாவட்ட பதிவாளர்களையும் இரு உதவி செயற்பொறியாளர்களையும் உதவிகர அலுவலர்களையும் கொண்டு இக்குழு இப் பணியினை மேற்கொள்கிறது. பதிவான கட்டிட ஆவணங்களில் புறநகர்களில் ரூ. 10,000க்கும் நகரங்களில் ரூ. 25,000க்கும் மேலான மதிப்புள்ள சொத்துக்களை ஆய்வு செய்து உண்மை நிலைகள் மறைக்கப்பட்டிருப்பின் உரிய நடவடிக்கை எடுத்து அரசுக்கு சேர வேண்டிய வருவாயை ஈட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டு

வருசிறது. 1992-93 நிதியாண்டில் 28.2.93 முடிய 61877 ஆவணங்களில் கண்ட கட்டிடங்களை ஆய்வு செய்து ரு. 13.22 கோடி வருவாய் ஏய்ப்பு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இவற்றில் இவ்வாண்டில் ரூ. 4.57 கோடி வசூலிக்கப் பட்டுள்ளது. கண்டுபிடிக்கப் புட்ட தொகையில் கணிசமான தொகை உச்ச நீதிமன்ற வழக்கு ஒன்றில் முடிவான தீர்ப்பாணையை எதிர் நோக்கி வசூலிக்கப் படாமல் உள்ளது.

9. இந்திய பதிவுச் சட்டம் மற்றும் முத்திரைச் சட்டங்களுக்கு முக்கிய திருத்தங்கள் கொண்டு வருதல் :—

(அ) பதிவுச் சட்டம் பிரிவு 28 : இந்திய பதிவுச் சட்டம் பிரிவு 28- ஐசாதகமாக எடுத்துக் கொண்டு அண்டை மாநிலங்களில் குறிப்பாக கேரளாவில் இம்மாநில சொத்து சம்பந்தப் பட்ட கிரய ஆவணங்களை பெரும் அளவில் பதிவு செய்கின்றனர். அண்டை மாநிலங்களிலுள்ள முத்திரைத் தீர்வை விகிதம் இம்மாநிலத்தை விடக் குறைவாக உள்ளதால் இவ்வாறு ஆவணங்கள், பதிவு செய்யப்படுகின்றன. இதனால் அரசுக்குப் பெரும் அளவில் முத்திரைத் தீர்வை இழப்பு ஏற்படுகிறது. எனவே, தமிழ்நாட்டுச் சொத்துக்களை தமிழ் நாட்டிலேயே பதிவு செய்யும் வகையில் இந்தியப் பதிவுச் சட்டம் பிரிவு 28க்கு திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது. இதனல் தமிழ்நாட்டுச் சொத்துக்கள் அண்டை மாநிலங்களில் பதிவு செய்யும் போக்கை அறவே களைய ஏதுவாகும்.

(ஆ) முத்திரைச் சட்டம் பிரிவு 27 : விற்பனை, பரிவர்த்தனை, தானம் போன்ற ஆவணங்களில் முத்திரைத் தீர்வையை செலுத்துவதை நிர்ணயிக்கும் கைமாறு தொகை சந்தை மதிப்பு மற்றும் சொத்து பற்றிய உண்மை விவரங்கள் சூழ்நிலைகளை பத்திரத்தில் முழுமையாக தர வேண்டும். ஆனால், முத்திரைத் தீர்வை ஏய்ப்பு செய்யும் நோக்குடன் மேற்கண்ட விவரங்கள் ஆவணங்களில் மறைக்கப்படுகின்றன.

ஆவணத்தில் உள்ள குறைபாடுகளை நிரூபிக்கவும் ஊர்ஜிதம் செய்யவும் நிதி சார்ந்த விசாரணைக்கு வழிவகை செய்திடவும், சொத்தினை ஆய்வு செய்து விசாரிப்பதற்கும் அத்தகைய குற்றத்தினை இணக்கம் செய்துகொள்ளும் போது இணக்கக் கட்டணம் நிர்ணயிக்கவும், முதன்மை வருவாய், கட்டுப்பாடு அதிகாரி (முத்திரைத் தாள்) மேல் முறையீடுகளைக் கவனிக்கவும் முத்திரைச் சட்டம் பிரிவு 27-இல் வழிவகைகளை ஏற்படுத்த திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது.

1993 மார்ச் 29]

(இ) முத்திரைச் சட்டம் பிரிவு 47 ஏ : முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏ-இன் படி ஆட்சியரால் ஆவண சொத்தின் சந்தை மதிப்பு நிர்ணயித்த பின்பு, இதனால் பாதிப்பு ஏதும் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர் சார்பு நீதிமன்றங்கள் மற்றும் நகர உரிமையியல் நீதி மன்றங்களில் மேல், முறையீடு செய்யலாம். இவ்வாறு மேல் முறையீடு செய்யும் போது விரைவில் நிவாரணம் கிடைத்திடவும் நிர்வாகம் செலவைக் குறைக்கவும், அதிகார அமைப்பில் மேல் முறையீடு செய்ய வகை செய்தல் நல்லது. எனவே, ஆட்சியரின் ஆணையை எதிர்த்து முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி (முத்திரை) யிடம் மேல் முறையீடு செய்யும் வகையில் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47-(ஏ)-இல் திருத்தம் செய்யப்படவுள்ளது.

10. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திருத்தங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :—

தமிழ்நாடு சட்டம் 43/92இன்படி அண்டை மாநிலங்களில் பதிவாகும் தமிழக சொத்துக்களைப் பொறுத்த ஆவணங்கள் மீது இம்மாநிலத்தில் நிலவும் சந்தை மதிப்பு மற்றும் தீர்வை விகித அடிப்படையில் முத்திரைத் தீர்வை வசூலித்திட முத்திரைச் சட்டம் பிரிவு 19-பி-க்கு திருத்தம் கொண்டு வரப்பட்டது.

தமிழ்நாடு சட்டம் 39/92-இன்படி சில குறிப்பிட்ட வகையானப் பத்திரங்கள் மீதான முத்திரைத் தீர்வை விகிதம் 1-7-1992 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டது. சில வகை குத்தகைகள், உடைமை இல்லாத அடைமானம், பாகப் பிரிவினை, விடுதலைகள், குடும்ப அங்கத்தினருக்குள் ஏற்பாடு ஆவணம் முதலானவற்றின் மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை 3 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக மாற்றி அமைக்கப்பட்டது. நிலைப்பட்ட விகிதத்தில் முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகிற இதர சில பத்திர வகைகளுக்கும், முத்திரைத் தீர்வை விகிதம் உயர்த்தப்பட்டது. மத்திய அரசின் அதிகாரத்திலுள்ள கடன் உறுதி ஆவணம், மாற்று முறி, கடன் ஏற்பளிப்பு, பங்கு மாற்றல், ரசீதுகள், கப்பல் சரக்குப் பெட்டி முதலான பத்திரங்களுக்கு முத்திரைத் தீர்வை விகிதத்தை மாற்றி அமைக்குமாறு மத்திய அரசுக்கு எழுதப்பட்டது.

11. முத்திரைத் தாள் தீர்வை மீதான மேல் வரி :—

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை உரிமையுடன் கூடிய அடைமானம், அதன் மாற்றம் நிலையான குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்த வரையில் முத்திரைத் தாள் தீர்வையுடன் 5 சதவீதம் மேல்வரி கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்த

மட்டில் மேல் வரியாக வசூலிக்கப்படும் தொகையில் 10 சதவீத தொகையை வசூல் கட்டணமாக இத்துறை எடுத்துக் கொண்டு எஞ்சியுள்ள 90 சதவீத தொகையை மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது. அதே போல் நகர பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு சம்பந்தப்பட்ட மேல் வரி வசூலில் 3 சதவீதம் இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக் கொள்கிறது. மீதமுள்ள 97 சதவீதம் மேல் வரியை சம்பந்தப்பட்ட நகர பஞ்சாயத்துக்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

12. 1991-92 ஆம் ஆண்டிலும், 1992-93 ஆம் ஆண்டிலும் முத்திரைத்தாளின் வரவு செலவு விவரங்கள் :—

கணக்கு தலைப்பு.	1991-92	1992-93 (1-4-92 31-1-93)
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
1. நீதித்துறை சாரா முத்திரைத் தாள்கள்.	2,05,66,08,690	1,83,93,62,165
2. நீதித்துறை சார்ந்த முத்திரைத் தாள்கள்.	16,78,70,348	15,25,50,312
3. உண்டியல் முத்திரைத்தாள்கள்.	8,54,73,218	5,16,100
4. ஒட்டு முத்திரை வில்லைகள்.	19,75,43,992	28,64,53,388
5. பலவகை வரவு ...	60,32,61,209	51,77,49,982
பெரு மொத்த வரவுகள்.	3,11,07,57,457	2,79,66,31,947
கழிப்பு—திருப்பிச் செலுத்தியவை :		
1. உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்படும் தொகை உட்பட நீதித் துறை சாராதவை.	77,75,97,804	79,37 18,421
2. நீதித்துறை சார்ந்தவை.	62,71,032	37,62,251
மொத்தம் ...	78,38,68,836	79,74,80,672

TRUTH ALONE TRIUMPHS

1993 பார்ச் 29]

கட்டணங்கள் :	ரூ.	ரூ.
1. முத்திரைத்தாள் விற்பனையில் தள்ளுபடி.	86,72,490	87,36,064
2. பணியாளர் செலவு	96,72,773	75,34,208
3. நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் அச்சகத்திற்கு செலுத்தத்தக்க கட்டணம்.	1,16,53,480	1,15,83,063
மொத்தச் செலவுகள் ..	2,99,98,743	2,78,53,335
மொத்த வரவுகள் ..	3,11,07,57,457	2,79,66,31,947
மொத்த செலவுகளும் திருப்பிக் கொடுக்கப் பட்ட தொகையும்.	81,38,67,579	82,53,34,007
நிகர வரவுகள் ..	2,29,68,89,878	1,97,12.97,940

இணைப்பு—IV

(63—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

வணிக வரி மற்றும் அறநிலையத் துறை

மானியக் கோரிக்கை எண். 6.

பத்திரப் பதிவு—கொள்கை விளக்கக் குறிப்பு.

1864 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பலதரப்பட்ட சேவைகளை ஆற்றும் பத்திரப் பதிவுத் துறை தனது 128 ஆண்டு கால வரலாற்றை இவ்வாண்டில் நிறைவு செய்ய உள்ளது. இத்துறை 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தையும் (மத்திய சட்டம் 16/1908) மற்றும் கீழே பத்தி 3-ல் குறிப்பிட்ட சட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பதிவு செய்தலும், அவை சம்பந்தப்பட்ட பதிவு ஆவணங்களைப் பாதுகாத்துப் பேணுதலும் இத்துறையின் முக்கியமான பணிகளாகும்.